41

உ

கணபதிதுணை

OFFICE ... 3-JUL 1912 MADRAS





# விசேஷ தீக்ஷானுஷ்டானவிதி.

இஃது
ஸ்ரீவைகுண்டம்
உமையொருபாகமடம் ஆதீனம்
சுவாமிகளால்
இயற்றி
திருநெல்வேலி தெற்பக்குளத்தெரு
சிவராமசுப்பிரமணிய தீக்ஷிதரவர்களால்

திருநெல்வேலி.
நூருல் இஸ்லாம் பிரஸ் அச்சு இயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

[illegible]ண்டாம் பதிப்பு
[illegible]ீதாபி ௵
[illegible]லை அணா 2.

Q23:417
N12
147058.

உ

கணபதி துணை

THE REGISTRAR
REGISTERED
3 JUL 1912
MADRAS





# விசேஷ

# தீக்ஷாநுஷ்டானவிதி.

இஃது
ஸ்ரீவைகுண்டம்
உமையொருபாகமடம் ஆதீனம்
சுவாமிகளால்
இயற்றி
திருநெல்வேலி தெற்பக்குளத்தெரு
சிவராமசுப்பிரமணிய தீக்ஷதரவர்களால்

திருநெல்வேலி
நூருல் இஸ்லாம் பிரஸ் அச்சு இயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு
பரிதாபி ௵
விலை அ. ணா 2.

OFFICE OF THE REGISTRAR
MADR

# முகவுரை

அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரமசிவத்தின் திருவருளைப்பெறுதற்கு முதற்சாதனமாயுள்ள சைவ தீக்ஷையை விரித்துரைக்கும் சைவாகமங்கள் மூலாகமங்களாகவும் உபாகமங்களாவும் அருளிச்செய்யப்பட்டுள்ளன. அவற்றின் சாராம்சமான பதினெண்பத்ததிகளை ஆதீன சம்பிரதாயப்படி அனுஷ்டித்து வருகின்றனர்: பத்ததிகளில் சமைய விசேஷ நிற்வாண தீக்ஷிதர் ஆசாரியர்பரியந்தம் பொதுவாகவே கூறப்பட்டிருக்கின்றன. ஆகமப்பிரமாணங்களையும் முன்னோர்களின் அனுஷ்டானத்தையும் அனுசரித்து சமைய தீக்ஷானுஷ்டானவிதியும், விசேஷதீக்ஷானுஷ்டானவிதியும் அச்சிடப்பட்டன. முன்பதிப்பை அனேக பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து இவ்விசேஷ தீக்ஷானுஷ்டான விதி இரண்டாம் பதிப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றன. இதில் நிகழும் சந்தேகங்களை ஆசாரியமுகமாய் தெரிந்துகொள்க. சிவ தீக்ஷை இல்லாவிடில் ஒரு கிரியைக்கும் அதிகாரியல்லனுதலால் தீக்ஷையை பாலப்பருவத்திலேயே செய்தல் வேண்டும். தீக்ஷையில்லாதான் செய்யும் எக்கிரியையும் நிஷ் பிரயோஜனமேயாகும்.

## ஸம்ஹிதாமந்திரம் (௰க)

ஓம் ஈசான மூர்த்தயே நம:
ஓம் தத்புருஷவக்திராய நம:
ஓம் அகோர இருதையாய நம:
ஓம் வாமதேவ குஹியாயநம:
ஓம் சத்தியோஜாத மூர்த்தயே நம:
ஓம் இருதையாய நம:
ஓம் சிரசே நம:
ஓம் சிகாயை நம:
ஓம் கவசாய நம:
ஓம் நேத்திரேப்பியோ நம:
ஓம் அஸ்திராய நம:

முன் ஐந்திற்க்கும் பஞ்சப்பிரம்ம மந்திரமென்றும் பின் ஆறுக்கும் ஷடங்க மந்திர மென்றும் பெயர்.

## கலாமந்திரம் (ரு)

ஓம் நிவிர்த்தி கலாயை நம:
ஓம் பிரதிஷ்டா கலாயை நம:
ஓம் வித்தியாகலாயை நம:
ஓம் சாந்தி கலாயை நம:
ஓம் சாந்திய தீதகலாயை நம:

REGISTERED 1912 MADRAS

உ

கணபதி துணை.

# விசேஷ தீக்ஷா னுஷ்டான விதி.

## குருதுதி.

அமைபங் குற்றிடு மற்புத னங்கணன்
நமைவங் துற்றருள் செய்திட நண்ணியிங்
குமைமங் குற்றமெய் யொண்குரு வென்றிடுங்
கமைவங் துற்றவன் தாள்தலைக் கண்ணதே.

| மந்திரம். | தந்திரம். |
|---|---|
| க. ஓம்மகாகணபதயேநம: | என்று, சிரசில் மும்முறை குட்டிக்கொள்க. |
| உ. ஓம் குருவே நம: | என்று, சிரசில் கைகூப்பிக் கும்பிட்டுக் கொள்க. |

## ந. அஷ்டஸம்ஸ்காரம் ஜலத்தில்.

| | |
|---|---|
| க. ஓம் சிவாய நம: | என்று, நிரீக்ஷணமுத்திரை பெரு விரல், மோதிர விரல் சேர்த்து வலக்கணிடக்கண் நெற்றிக்கண்களை முறையே தொட்டு ஜலத்தைப்பார்க்க. |
| உ. ஓம் அஸ்திராய நம: | என்று, புரோக்ஷணமுத்தி ரை வலக்கை விரல்களைச்சே |

| | |
|---|---|
| | ர்த்த பதாகையால்ஜலத்தில் புரோக்ஷிக்க. |
| ௩. ஓம் அஸ்திராயஉம்படு | என்று, தாடன முத்திரை வலக்கை ஆள்க்காட்டி விரலால் ஜலத்தில் தட்டுக. |
| ௪. ஓம் கவசாய வெளஷடு | என்று, அப்பியுக்ஷண முத்திரை வலக்கைப் பதாகையால் ஜலத்தை மூடுக. |
| ௫. ஓம் அஸ்திராய படு | என்று, தாளத்திரைய முத்திரை பெருவிரலைநீக்கிமற்ற விரல்களால் இடக்கையில் மும்முறை தட்டுக. |
| ௬. ஓம் அஸ்திராய படு | என்று, சோடி கைமுத்திரை பெருவிரலடியை ஆள்க்காட்டி விரலால்தொட்டுகிழக்கு முதல் ஈசானர் வரை எட்டு திக்கும் தெறிக்க. |
| ௭. ஓம் கவசாயவெளஷடு | என்று, அவகுண்டன முத்திரை ஆள்க்காட்டி விரலால் ஜலத்தில்ஒருதரம்சுற்றுக. |
| ௮. ஓம் இருதையாயவெளஷடு | என்று, தேனு முத்திரை இருகைகளையும் கோர்த்து ஆள்க்காட்டி விரல்களை நடுவிரல்களோடும் சிறு விரல்களை மோதிர விரல்களோடுஞ் சேர்த்து கீழ்நோக்கி ஜலத்தில் காமதேனுவின் அமிர்தம் பொழிந்ததாய்ப் பாவிக்க. |

## ௪ அஸ்திர சந்தி.

க. ஓம் அஸ்திராய ஸ்வாகா என்று, மூன்றுதரம் ஜலத்தை விரலகளால் தொட்டு சிரசில் புரோக்ஷிக்க,

உ. ஓம்அஸ்திராய ஸ்வாகா என்று, மூன்றுதரம் ஜலத்தால் தர்ப்பிக்க.

௩. ஓம்அஸ்திராய நம: என்று, பத்துரு ஜெபித்து

௪. ஓம் நம அஸ்திராய ஸ்வாகா என்று ஒருதரம் ஜலத்தால் தர்ப்பிக்க.

## ௫ ஆசமனம்.

க. ஓம் ஆத்மதத்துவாய ஸ்வதா

உ. ஓம்வித்தியாதத்துவாய ஸ்வதா

௩. ஓம் சிவதத்துவாய ஸ்வதா என்று, பசுவினது காது போல் கைகளை குவித்து மூன்றுதரம் உழுந்தமிழும் படியான அளவு ஜலத்தினுல் ஆசமிக்க.

## ௬ அதரசுத்தி.

ஓம் அஸ்திராய நம: என்று, அதரங்களை பெருவிரலால் வலமிடமாக துடைக்க.

## எ தொடுமிடம்.

ஓம் இருதையாயநம: என்று, பெருவிரல் மோதிரவிரல்சேர்த்து,நாடி, மூக்கு

கள், கண்கள், காதுகள், நாபி, இருதையம், புஜங்கள், சிரசு, என்னும், பன்ரெண்டு ஸ்தானங்களேயும் வலமிடமாகத் தொடுக.

## அ கரசுத்தி.

ஓம் அஸ்திராயபட் என்று, இடதுள்ளங்கையிலிருதாமும் புறங்கையிலொருதாமும் வலதுஉள்ளங்கையிலும் புறங்கையிலுமொவ்வொருதாமும் தடவுக.

## கூ விபூதிதாரணம்.

விபூதியை யெடுத்து இடதுகையில் வைத்து,

க. ஓம் அஸ்திராய நம: என்று, ஸம்ரெக்ஷண முத்திரை வலக்கையால் மூடுக.

உ. ஓம் அஸ்திராயபட் என்று, சோடிகை முத்திரையும்.

ந. ஓம் கவசாய வௌஷட் என்று அவகுண்டன முத்திரையும் கொடுத்து.

அவ்விபூதியை வலதுகையால் மூடிக்கொண்டுஸம்ஹிதா மந்திரத்தாலும் கலாமந்திரத்தாலும் அபிமந்திரித்து,

ச. ஓம் அஸ்திராயபட் என்று, அவ்விபூதியை மோதிரவிரலால் தொட்டு கன்னிமூலேயில் ராக்ஷஸ விக்கினத்தின்பொருட்டு தெரிக்கவும்

ரு. ஓம் ஹ: என்று, அவ்விபூதியைசிரசு

| | |
|---|---|
| | முதலிய ஸ்தானங்களில்உத்தூளணஞ் செய்க. |
| சு. ஓம் கவசாய நம: | என்றுஜலம்விட்டுகுழைக்க |
| எ. ஓம்ஈசானமூர்த்தயேநம: | என்றுசிரசில்மூன்றுதரமும் |
| அ.ஓம்தத்புருஷவக்திராய நம: | என்று, நெற்றியில் மூன்று தரமும். |
| கூ. ஓம் அகோரஇருதை யாய நம: | என்று, மார்பில் மூன்றுதரமும். |
| ௧0. ஓம் வாமதேவ குஹியாய நம: | என்று, நாபியில் ஒருதரமும். |
| ௧௧. ஓம் சத்தியோஜாத மூர்த்தயேநம: | என்று, முழங்கால்கள், புஜங்கள், காதுகள், முதுகு, கழுத்து, இதுகளில் ஒவ்வொரு தரமும் தரித்து. |
| ௧௨. ஓம் கவசாய நம: | என்று, கைகழுவி அந்தஜலத்தை வலது கையை முஷ்டியாகப் பிடித்து இடது கைதலத்தில் வைத்தலாகிய கும்பமுத்திரையால். |
| ௧௩. ஓம்ஈசானமூர்த்தயேநம: | |
| ௧௪.ஓம்தத்புருஷவக்திராயநம: | |
| ௧௫. ஓம் அகோர இருதை யாயநம: | |
| ௧௬. ஓம் வாமதேவ குஹியாய நம: | |
| ௧௭. ஓம் சத்தியோஜாத மூர்த்தயே நம: | என்று, அபிமந்திரித்து |
| ௧௮. ஓம் சிவாயஸ்வாகா | என்று, சிரசில் புரோக்ஷித்துக்கொள்க. |

முன்போல் ஆசமனஞ்செய்து அதரந்துடைத்து தொடுமிடந்தொட்டு கரசுத்திசெய்து

## ௰ ஸகளீ கரணம்.

### (க) கர நியாசம்.

| | |
|---|---|
| க. ஓம்சக்தயேவௌஷடு | என்று இருகைகளையுஞ்சேர்த்து அமிர்தத்தால்நினைந்ததாய் பாவிக்க. |
| உ. ஓம் சிவாஸனாய நம: | |
| ந. ஓம் சிவமூர்த்தயே நம: | என்று உள்ளங் கைகளில் பெருவிரல்களால் தொடுக. |
| ச. ஓம் ஈசானமூர்த்தயேநம: | |
| ரு. ஓம் தத்புருஷ வக்திராய நம: | |
| சூ. ஓம் அகோர இருதையாயநம: | |
| எ. ஓம் வாமதேவகுகியாய நம: | |
| அ. ஓம் சத்தியோஜாத மூர்த்தயேநம: | என்று, பெருவிரல்களில் ஆள்க்காட்டி விரல்களாலும் ஆள்க்காட்டிவிரல்கள்முதல் சிறுவிரல்கள்வரை பெருவிரல்களாலும் முறையேமேல் நோக்கித்தடவுக. |
| கூ. ஓம்வித்தியாதேஹாய நம: | என்றுஉள்ளங் கைகளில் பெருவிரல்களால் தொடுக. |
| ௰ ஓம்நேத்திரேப்பியோநம: | என்று, உள்ளங்கைகளில் ஆள்க்காட்டிவிரல்கள் நடுவிரல்கள் மோதிரவிரல்களை |

உள்ளே மடக்கி மற்றவிரல் களை வெளியே நீட்டுக.

௰௧. ஓம்சிவாய நம: என்று, உள்ளங் கைகளில் பெருவிரல்களால் தொடுக.

௰௨. ஓம் இருதையாய நம:

௰௩. ஓம் சிரசே நம:

௰௪. ஓம் சிகாயை நம:

௰௫. ஓம் கவசாய நம:

௰௬. ஓம் அஸ்திராய நம: என்று, சிறுவிரல்கள்முதல் ஆள்க்காட்டி விரல்கள்வரை பெருவிரல்களாலும் பெரு விரல்களில் ஆள்க்காட்டிவிர ல்களாலும்முறையே தடவுக

௰௭. ஓம் கவசாயவௌஷடு என்று, கைகளை ஒருதரம் சுற்றுக.

௰௮. ஓம்சிவாய வௌஷடு என்று, இரண்டுகைகளை யுஞ் சேர்த்தலாகிய பரிமீ கரணம் செய்க.

## (௨) அங்கநியாசம்.

௧. ஓம் சிவாஸனாயநம:

௨. ஓம் சிவமூர்த்தயேநம: என்று, பெருவிரல் மோதிர விரல் சேர்த்து இருதையத் தைத்தொடுக.

௩. ஓம் ஈசானமூர்த்தயேநம:

௪. ஓம் தத்புருஷ வக்திராய: நம:

௫. ஓம் அகோரஇருதையாய நம:

௬. ஓம் வாமதேவ குஹ்யாய நம:

௭. ஓம் சத்தியோஜாத மூர்த்தயேநம: என்று, வலக்கை விரல்களை முஷ்டியாகப்பிடித்து பெருவிரலால் சிரசிலும் பெருவிரலோடு ஆள்க்காட்டி விரல் முதல் சிறுவிரல்வரை முறையே தொட்டு புருவமத்தி, இருதையம், நாபி, முழங்கால்களிலுந் தொடுக.

௮ ஓம்வித்தியாதேஹாயநம: என்று, பெருவிரல் மோதிரவிரல்சேர்த்து இருதையத்தைத் தொடுக.

௯. ஓம்நேத்திரேப்பியோநம: என்று, வலக்கை ஆள்காட்டிவிரல், நடுவிரல், மோதிரவிரல்களை நீட்டி மற்றவிரல்களை மடக்கி வலம், இடம், நெற்றிக்கண்களை, முறையே தொடுக.

௰ ஓம் சிவாய நம: என்று, பெருவிரல்மோதிரவிரல் சேர்த்துஇருதையத்தைத் தொடுக.

௰௧. ஓம் இருதையாயநம:

௰௨. ஓம் சிரசே நம:

௰௩. ஓம் சிகாயை நம: என்று, சிறுவிரல், மோதிரவிரல், நடுவிரல்களோடு, பெருவிரல்கள் சேர்த்து இருதையம், சிரசு, சிகை, இவைகளில் முறையே தொடுக.

Q23:417 M2



| | |
|---|---|
| ௧௪. ஓம் கவசாய நம: | என்று, ஆள்க்காட்டி விரல்களை கழுத்தைச்சுற்றி மார்புக்கு நடுவாக நிறுத்துக. |
| ௧௫. ஓம் அஸ்திராய நம: | என்று, மோதிர விரல்களை வல இடக்கைகளில் மாறி மாறித்தொடுக. |
| ௧௬. ஓம் அஸ்திராயபடு | என்று, தாளத்திரைய முத்திரையும். |
| ௧௭. ஓம் அஸ்திராயபடு | என்று, சிரசில் சோடிகை முத்திரையால் திக்குபந்தனமும். |
| ௧௮. ஓம்கவசாயவௌஷடு | என்று, சிரசில் அவகுண்டனமுத்திரையும். |
| ௧௯. ஓம் சிவாய வௌஷடு | என்று, பாதமுதல் சிரசுவரை தொடுதலாகிய மகா முத்திரையுங் கொடுக்க. |

## ௯க பிராணாயாமம்.

வலக்கை ஆள்க்காட்டி விரலையும் நடு விரலையுமுள்ளேமடக்கி வலது நாசியில் பெரு விரல்வைத்தடைத்து ஸம்ஹிதா மந்திரஞ்செபித்து வாயுவை உள்ளேவாங்குதலாகிய பூரகஞ்செய்து, மோதிரவிரலால் இடது நாசியை அடைத்து ஸம்ஹிதா மந்திரஞ்செபித்து வாயுவை அடக்குதலாகிய கும்பகஞ்செய்து, பெருவிரலைத்திறந்து ஸம்ஹிதா மந்திரஞ் செபித்து வாயுவை வெளியே விடுதலாகிய ரேசகஞ்செய்து கைசுத்தியின்பொருட்டு வலச்செவியை மூலமந்திரஞ்சொல்லித்தொடுக.

14058

## ௰௨ ஜலசுத்தி.

| | |
|---|---|
| ௧. ஓம் இருதையாய வௌஷடு | என்று, வலக்கைஆள்காட்டிவிரலை துறட்டிபோல்வளைத்து மற்றவிரல்களைஉள்ளேமடக்குதலாகிய அங்குசமுத்திரையால் புருவமத்தியிலிருக்கிற அமிர்தத்தை எடுத்ததாகப் பாவித்து நீரிடைவைத்து. |
| ௨. மூலமந்திரத்தால் | ஜலத்தை தொட்டு ஜபித்து. |
| ௩. ஓம் அஸ்திராயபடு | என்று, சோடிகைமுத்திரையும் |
| ௪. ஓம் கவசாயவௌஷடு | என்று, அவகுண்டனமுத்திரையும். |
| ௫. ஓம் இருதையாயவௌஷடு | என்று, தேனுமுத்திரையும் கொடுத்து சிவதீர்த்தமாகப் பாவிக்க. |

## ௰௩ காலை தேவித்தியானம்.

சிவந்தநிறமும், சிவந்தபட்டாடையும், சிவந்தபூஷணமும், ஜடையும், பூணூலும், அன்னவாகனத்தின்மீது பதுமாசனத்திருக்கையும், நான்கு முகமும், நான்குகரமும், சிருக்கும், ஜபமாலையும், தண்டமும், கமண்டலமும், எட்டுநேத்திரமும், பாலப்பருவமும், சத்துவகுணமும், பிரம்மஸ்வருபமு முடைய ஸரஸ்வதியே நம.

## ௰௪ மாலை தேவித்தியானம்.

நீலோத்பலதள நிறமும், ஜடையிலே மூன்றாம்பிறைச்சந்திரனும், பூணூலும், ரிஷபவாகனத்தின் மீது

பத்மாசனத்திருக்கையும், நான்குகரமும், திரிசூலமும், ஜபமாலையும், அபயமும், சக்தியும், மூன்றுநேத்திரமும், கொஞ்சம் நழுவியயௌவனமும், தாமதகுணமும் ருத்திரஸ்வரூப முடைய பார்வதியேநம:

## ௫ மார்ஜ்ஜனம்.

வலக்கையினால் ஜலத்தை எடுத்து இடக்கையில் விட்டு முஷ்டியாகப்பிடித்து வலக்கையை இடக்கைத்தலத்தில் வைத்தலாகிய கும்பமுத்திரையால் ஸம்ஹிதா மந்திரம் ஜபித்து.

ஓம் சிவாயவௌஷடு என்று, சிரசில்புரோக்ஷித்துக் கொள்க.

மீட்டும் ஜலமெடுத்து இடதுகையில்விட்டு அதினின்றும் கீழே ஒழுகுகிற ஜலத்தை ஸம்ஹிதா மந்திரங்களை, ஓம் ஈசானமூர்த்தயே வௌஷடு என்பதுபோல் சொல்லி மந்திரத்திற்கொருமுறை சிரசில்புரோக்ஷிக்க.

## ௬ அகமர்ஷணம்.

மீந்த ஜலத்தை வலதுகையில் விட்டு தர்மஸ்வரூபமாய் பாவித்து நாசிக்கு ஸமீபத்தில்கொண்டுபோய் இடது நாசிவழியாய் உள்ளேபோய் உள்ளுள்ளபாவங்களை மைக்குழம்பு போலாக்கி வலது நாசி வழியில் வந்ததாகப் பாவித்து அதை

ஓம் அஸ்திராயஹூம்பட் என்று வலக்கால் பெருவிரலக்கினியில் விட்டு கோபப் பார்வையாய் பார்த்து சாம்பலானதாய் பாவிக்க.

## ௰௭ கவசவேஷ்டனம்.

முன்போல் ஆசமனஞ்செய்து அதரந்துடைத்து தொடுமிடந்தொட்டு கரசுத்தி ஸகளீகரணமுஞ் செய்து

ஓம் கவசாயநம: என்று, ஜலத்தால் தன்னை வலமாகச் சுற்றி ஸதாசிவ மூர்த்தியை தியானஞ்செய்க

## ௰௮. தர்ப்பணம்.

௧. ஓம் சிவாயஸ்வாஹா என்று மூன்றுதரம் தற்பித்து
௨. ஓம்ஈசானமூர்த்தயேஸ்வாஹா
௩. ஓம்தத்புருஷவக்திராயஸ்வாஹா
௪. ஓம் அகோரஇருதையாயஸ்வாஹா
௫. ஓம் வாமதேவகுஹியாயஸ்வாஹா
௬. ஓம் சத்தியோஜாதமூர்த்தயேஸ்வாஹா
௭. ஓம் இருதையாயஸ்வாஹா
௮. ஓம் சிரசேஸ்வாஹா
௯. ஓம் சிகாயைஸ்வாஹா
௰. ஓம் கவசாயஸ்வாஹா
௰௧. ஓம் நேத்திரேப்பியஸ்வாஹா
௰௨. ஓம்அஸ்திராயஸ்வாஹா

௧௩. ஓம் ஸர்வேப்பியோ
மந்திரேப்பியஸ்வாஹா
௧௪. ஓம் ஸர்வேப்பியோதே
வேப்பியஸ்வாஹா
௧௫. ஓம்கணபதயேஸ்வாஹா
௧௬. ஓம் தேவ்வியைஸ்வாஹா
௧௭. ஓம் ஸ்கந்தாயஸ்வாஹா
௧௮. ஓம் சிவசூரியாயஸ்வாஹா
௧௯. ஓம் நந்திநேஸ்வாஹா
௧௨. ஓம் சண்டாயஸ்வாஹா என்று தர்ப்பித்து முன் போல் ஆசமனம் முதலியனவும் கரசுத்திஸகளீகரணமுஞ்செய்து.
ஓம் என்று முன்புஜலத்திடை எடுத்துவைத்த அமிர்தத்தை முன்போல் அங்குசமுத்திரையால் எடுத்து பூருவமத்திரில் ஒடுக்கிக்கொள்க

## ௰௯ பஞ்சாக்ஷரஜபம்.

| | |
|---|---|
| மூலமந்திரத்தை | நூற்றெட்டு உரு அல்லது இயன்ற அளவு ஜபித்து |
| ஸம்ஹிதாமந்திரத்தை | ஒருதரம் ஜெபித்து |
| ஓம் சிவாயஸ்வாஹா | என்றுஜலத்தை கீழேவிட்டு ஜப பலத்தைசிவபெருமான் பொருட்டே கொடுக்கத்தக்கதாக பாவிக்க |

## ௨௰ திசைவணங்கல்

௧. ஓம் சிவசூரியாயநம: என்று கிழக்கிலும்
௨. ஓம் தக்ஷிணாமூர்த்த
யேநம: என்று தெற்கிலும்

ங. ஓம்மனோன்மண்யை நம: என்று மேற்கிலும்
ச. ஓம் பாலசுப்பிரமண்யா யநம: என்று வடக்கிலும் சுற்றிக்கும்பிடுக

உமையொருபாகம் திருவடித்தாமறை அடியேன் முக்காலுஞ்சிரசின்மேல் கொண்டேன் என்று மும்முறை வணங்கவும் விபூதி தரித்து

ஓம் அஸ்திராய நம: என்று அனுஷ்டானஞ்செய்த இடத்தில்ஜலத்தை புரோக்ஷிக்கவும்.

சந்தியகாலமானது காலை சூரிய உதையத்திற்கு முன்னும், மாலை சூரியன் பாதி அடைகிற ஸமயமுமானதால் அக்காலந்தவறின பிராயசித்தமாக ஸம்ஹிதா மந்திரத்தை ஒரு தரம் ஜெபிக்கும்படி விதித்துளதை மூலமந்திர ஜபத்தோடு செய்பக்கூறப்பட்டது. சந்தியான ஒரு கால அனுஷ்டானந்தவறின், மூல மந்திரத்தை நூறுருவும், இரண்டு காலந்தவறின், இருநூறுருவும், ஒரு நாளை தவறின் இரண்டாயிரம் உருவும், மேல் தவறின் பிராயச்சித்தம் செய்யவேண்டும். அதை ஆசாரியமுகமாய் அவ்வப்போது தெரிந்து கொள்க.

முற்றிற்று.

RBS: 417
N12
600 008
147058